**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**13/2013

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**<u>நாள் : 20.11.2024</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | ரெங்கராஜன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மருத்துவர் தங்கமணி கட்டிடத்திற்கு தெற்கு பக்கத்திலுள்ள எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எங்களது ஆவணத்தின் அடிப்படையில் எவ்வளவு சதுரடிக்கு உடன்படிக்கை செய்து கொண்டோம் என்றால் முதன் முதலாக 20,000 சதுரடிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டது. அப்போது தெற்கு பக்கத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பது குறித்து அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. நானும் என் அப்பாவும் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். தங்கமணி கல்யாண மண்டபத்திற்கு தெற்கு பக்கத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பது குறித்து தெரியாமல் 20,000 சதுரடிக்கு உடன்படிக்கை செய்துக்கொண்டோம் என்றால் மருத்துவர் தங்கமணி சொன்னதன் அடிப்படையில் உடன்படிக்கை செய்துக்கொண்டோம். நான் சொல்வதுபோல் வாதி தங்கமணி அவ்வாறு 20,000 சதுரடி உள்ளதாக சொல்லவில்லை என்றாலும், நாங்களாகவே 20,000 சதுரடி இருப்பதாக சொல்லி மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

2) நான், என் அப்பா, அம்மா, சகோதரர் ஆகியோர்கள் பெயர்களில் 17,230 சதுரடி கிரைய சாசனம் செய்துள்ளோம். கல்யாண மண்டபத்திற்கு தெற்கில் தற்போது 19,000 சதுரடி உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வதுபோல் தங்கமணி கல்யாண மண்டபத்திற்கு தெற்கு பக்கத்தில் இல்லை என்றாலும், நாங்கள் கிரையம்ெ சய்துள்ள பத்திரத்திலுள்ளதுபோல் 17,230 சதுரடி பூமியில் இல்லை என்றாலும் சரியல்ல.

3) நாங்கள் கிரையம் உடன்படிக்கை செய்துக்கொண்டதுபோல் 20000 சதுரடி தெற்கு பக்கத்தில் இல்லை என்றாலும், கிரைய சாசனம் செய்ததில் சொல்லப்பட்டுள்ளபோல் 17,230 சதுரடி இல்லை என்றாலும் சரியல்ல. மருத்துவர் தங்கமணி அவரது மனைவிக்கு ஆவண எண்.2112/1983 ன்படி 6720 சதுரடியும், மற்றும் ஆவண எண்.2001/1986 ன்படி 2160 சதுரடியும், ஆவண எண்.2002/1986 ன்படி 5200 சதுரடியும் ஆக கூடுதல் 17.170 சதுரடி செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்றாலும், நான் சொல்வதுபோல் 20000 சதுரடியும் 17,230 சதுரடியும் இல்லை என்றால் சரியல்ல. மீதமுள்ள விஸ்தீரணம் உள்ள இடம் மண்டபத்தின் வடக்கு பக்கத்திலுள்ளது என்றாலும், நானாக இந்த ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியதால் நான் பொய்யாக ஒரு விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) தங்கமணி கல்யாண மண்டபத்திற்கு தெற்கு பக்கத்திலுள்ள இடத்திற்கு தனி பட்டா எனது பெயரில் வந்துள்ளதா என்றால் TSLR வந்துள்ளது. TSLR ஆவணமும் என் பெயரில் தனியாக இல்லை. என் தகப்பானார் மற்றும் என் அண்ணன், அம்மா ஆகியோர்கள் பெயரிலுள்ளது. பழைய டவுன் சர்வே எண்.3721 ஆகும். புதிதாக டவுன் சர்வே எண் வழங்கப்பட்டுள்ளதாக என்றால் சரியாக தெரியவில்லை. எனக்கு கூட்டு பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கல்யாண மண்டபத்திற்கு தெற்கில் எங்கள் 4 பெயரில் கிரைய உடன்படிக்கை செய்துக்கொண்டபோது அளந்து பார்க்கவில்லை என்றாலும், கிரைய சாசனம் செய்தவற்கு முன்பாகவும் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். கிரைய சாசனம் செய்தற்கு பின்னிட்டு சர்வேயர் மூலமாக அளந்து பார்த்தேன்.

5) பூமியில் எவ்வளவு நிலம் உள்ளது என்பது குறித்து தெரியாமலேயே நாங்கள் கிரைய சாசனம் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் கிரைய சாசனம் செய்தபோது மார்க்கெட் ரேட் சதுடிக்கு 50ரூபாய் விலை, வழிக்காட்டுதல் மதிப்பு 110 ரூபாய் ஆகும். நாங்கள் கிரையம் எழுதப்படும்போது அந்த நிலமாக இல்லை. பொட்டையன் குளம் இருந்தது. அதனால் ரூ 50/ என மார்க்கெட் மதிப்பு சொல்லப்பட்டது. நான் சொல்வதுபோல் குளம் என்ற வகைப்பாடு இல்லை என்றாலும், புஞ்சை என்றாலும் சரிதான். நடைமுறையில் பொட்டையன் குளமாக இருந்தது. வருவாய் துறை கணக்குகளில் புஞ்சை வகைப்பாடாக இருந்தது என்றால் சரிதான்.

6) நான் சொல்வதுபோல் பொட்டையன் குளம் கிடையாது என்றாலும், புஞ்சை வகைப்பாட்டை சேர்ந்தது என்றாலும் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் மருத்துவர் தங்கமணியிடம் தொகை செலுத்தி கிரைய உடன்படிக்கையும், கிரைய சாசனத்திற்கான மறுபயனையும் தரவில்லை என்றாலும் சரிதான். என் தகப்பனார் தான் வாதியிடம் கிரைய உடன்படிக்கை செய்துக்கொண்டார். கிரைய ஒப்பந்தம் கூட்டாகதான் செய்துக்கொண்டோம். கிரைய சாசனம் தனித்தனியாக செய்துக் கொண்டோம். நாங்கள் கிரைய ஒப்பந்தம் செய்துக்கொண்டபோது நான் அதில் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் அப்போது நடைமுறை இல்லை. அதனால் கையொப்பம் செய்யவில்லை.

7) நான் கிரைய உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ளதுபடி ரெங்கராஜன், கோவிந்தராஜன், முருகராஜன் மட்டும் தான் வருகிறோம் என்றாலும், என் அம்மா அந்த உடன்படிக்கையில் பணம் கொடுத்ததாகவோ சொல்லப்படவில்லை என்றாலும், அதனால் பெயர் சொல்லப்படாத நபருக்கு வாதி கிரையம் சாசனம் செய்து கொடுத்ததாக மோசடியாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதியிடம் கிரையம் ஒப்பந்தம் செய்து கொண்டதற்கு பின்னிட்டு கிரைய சாசனம் செய்துகொடுக்க கோரி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. நேரடியாக சென்று கேட்டோம். அவர் தான் காலதாமதம் செய்து வந்தார்.

8) கட்டாய பதிவுக்கு முன்னதாக வாதிக்கு அறிவிப்பு அனுப்பி கட்டாய பதிவுக்கு முன்னிலைப்படுத்தபோவதாக சொல்லியுள்ளேனா என்றால் அனுப்பவில்லை. அந்த காலக்கட்டத்தில் அவரது கட்டுபாட்டில் தான் நாங்கள் இருந்து வந்தோம். மேலும் அவர் என் சித்தப்பா என்பதால் அறிவிப்பு அனுப்பவில்லை. மோசடியாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி பதிவு செய்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் தான் வாதிக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பாமல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பி.சா.ஆ.2 ஆவணத்தை முன்னிலைப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணத்தில் தற்போது நீதிமன்றத்தில் எத்தனை தாள்கள் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளது என்றால் 4 தாள்கள் என்று சொல்லப்பட்டு 3 தாள்கள் தான் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள ஒரு தாள் என்னவானது என்றால் ஞாபகமில்லை.

9) வழக்கறிஞர் மூலமாக நான் மீதமுள்ள ஒரு தாளை முன்னிலைப்படுத்த கோரி வாதியால் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதற்கு

எனது தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்பும் ஒரு முத்திரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கட்டாய பதிவுக்கு சார் பதிவாளர் அலுவலத்தில் தாக்கல் செய்தபோது முடிவுறா ஆவணம் என சொல்லியும், மொத்தம் 4 தாள்களை கொண்டது என்று சொல்லி பி.சா.ஆ.2 ஆவணத்தில் மேலெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1968 மதிப்பு குறைப்பு விதி பிரிவு 3(1)ன் அடிப்படையில் ஒரு முத்திரை தாள் வைக்கப்படவில்லை என்பதாலும், அறிவிப்பு செய்யப்படவில்லை என்பதாலும், முடிவுறா ஆவணம் என்று கூறி மேலெழுத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். முடிவுறா ஆவணம் என சொல்லி கடந்த 24.12.1996–ல் மறுதலிப்பு எண்.3/1996 என சொல்லி பத்திர பதிவு மறுக்கப்பட்டுள்ளதாக மேலெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10) கிரைய சாசனத்தை முன்னிலைப்படுத்தும்போது தங்கமணியின் கையொப்பம் இல்லை என்பதால் தான் கட்டாய பதிவுக்கு சார்பதிவாளருக்கு அதிகாரம் இருந்தும் அவர் பதிவு செய்யாமல் முடிவுறா ஆவணம் என சொல்லி மேலெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. கட்டாய பதிவுக்காக சார்பதிவாளர் வாதிக்கு அறிவிப்பு அனுப்பினரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஒரு ஆவணத்தை கட்டாயப்பதிவுக்கு முன்னிலைப்படுத்தும்போது பதிவு செய்யும் நபருக்கு கட்டாயமாக அறிவிப்பு அனுப்பவேண்டும் என்றாலும், நான் முன்னிலைபடுத்திய கிரைய சாசன ஆவணத்தில் வாதியின் கையொப்பம் இல்லாததால் தான் சார்பதிவாளர் வாதிக்கு சம்மன் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல.

11) பி.சா.ஆ.2 ஆவணத்தை சார்பதிவாளர் பதிவு செய்ய முடியாது என சொல்லி மறுத்து அந்த ஆவணத்தை எங்களிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அப்போது ஒரு உத்தரவு கொடுத்திருப்பார் என்றாலும் அந்த உத்தரவை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் உத்தரவு கொடுத்தாரா என்று தெரியவில்லை.முடிவுறா ஆவணம் என சொல்லி சார்பதிவாளர் பதிவு செய்ய மறுத்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் தான் அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12) என்ன காரணத்திற்காக பி.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்ய மறுத்தார் என்றால் கிரையம் செய்து கொடுக்கும் நபர் வராத காரணத்தினால் பதிவு செய்துகொடுக்க முடியாது என சொல்லி மாவட்ட

பதிவாளர் அலுவலகத்திற்கு மேல்முறையீடு செய்யும்படி கூறினார்கள். கட்டாய பதிவின் போது கொடுத்த உத்தரகை தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவர் அவ்வாறு ஒரு உத்தரவு கொடுத்திருந்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வாதியின் கையொப்பம் பி.சா.ஆ.2 ஆவணத்தில் இல்லை என்பதால் தான் முடிவுறா ஆவணம் எனச் சொல்லி பதிவு செய்ய மறுத்தார் என்றால் சரியல்ல.

13) முடிவுறா ஆவணம் என சொல்லி சார்பதிவாளர் மறுத்தற்கு பின்னிட்டு நாங்கள் மோசடியாக வாதியின் கையொப்பத்தை செய்து, மாவட்ட பதிவாளரிடம் பதிவுக்காக முன்னிலைப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எப்போது மாவட்ட பதிவாளரிடம் பி.சா.ஆ.2 ஆவணத்தை முன்னிலைப்படுத்தினோம் என்றால் தேதி சரியாக நினைவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 19.12.1996–ல் முன்னிலைப்படுத்தி கையொப்பம் இல்லை என்பதால் 24.12.1996 வரை வாய்ப்பு கொடுத்து வாதியின் கையொப்பம் இல்லை என்பதால் தான் கடைசியாக 24.12.1996ல் ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. அப்போது பி.207 ஆவணம் என்றும் 4 தாள்கள் என்றும் குறிப்பிட்டு உத்தரவு போட்டுள்ளார் என்றால் சரிதான்.

14) மேற்படி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியாக தெரியவில்லை. தெரியவில்லை என்பதற்கும், தாக்கல் செய்தவற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்திருப்பேன் அவர் தாக்கல் செய்தாரா இல்லை என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி உத்தரவை நான் எனது முதல்விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு பாதமாக அமைந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த உத்தரவு என்னிடம் உள்ளதா என்றால் சரியாக இல்லை. நான் நகல் எடுத்து தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

15) மாவட்ட பதிவாளரிடம் பி.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்யும்போது எந்த எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டதென்றால் ஞாபகமில்லை. அங்கு 5/1996 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டதென்றால் சரியாக ஞாபகமில்லை. நான் அங்கு விசாரணைக்கு சென்றேனா என்றால் சென்றேன். அப்போது வாதி பி.சா.ஆ.2 ஆவணத்தை கைரேகை நிபுணருக்க அனுப்பவதற்காக மனு கொடுத்தாரா என்றால் சரிதான். அந்த மனு 1/1997 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டதென்றால் சரியாக ஞாபகமில்லை. மேற்படி அசல் மனு மற்றும் இடைநிலை மனுவில் எந்தெந்த தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்றால் சரியாக

ஞாபகமில்லை. கடந்த 25 வருடங்களுக்கு முன்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

16) கைரேகை நிபுணருக்கு அனுப்பவதற்காக கொடுக்கப்பட்ட மனு கடந்த 04.08.1997ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் மனுவிலும் அதே தேதியில் தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.கைரேகை நிபுணருக்கு பி.சா.ஆ.2 ஆவணத்தை அனுப்ப உத்தரவிட்டாரா என்றால் சரியாக ஞாபகமில்லை. தள்ளுபடி செய்த விவரம் தெரியும். மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நான் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் சரியாக தெரியவில்லை. மாவட்ட பதிவாளர்ஒருமன சார்பாக நடந்துக்கொண்டு இடை நிலை மனு எண்.1/1997–ஐ தள்ளுபடி செய்து, அதில் மேல்முறையீடு செய்ய வாதிக்கு வாய்ப்பு கொடுக்காமல் அசல் மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல.

17)கடந்த 04.08.1997–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுநாள் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய சாசன ஆவணத்தை முன்னிலைப் படுத்தினோம். அசல் மனு எண்.5/1996 மற்றும் இ.ம.எண்.1/1997–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை வாதிக்கு அனுப்பினார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு வாய்ப்பு கொடுக்காமல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மன்னார்குடி சார்பதிவாளர் பிறப்பித்த உத்தரவு மற்றும் மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 உத்தரவுகளையும் நான் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18) வாதி தங்கமணி வா.சா.ஆ.2 ஆக மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவினை சான்றிட்ட நகலாக செய்துள்ளார் என்றால் சரிதான். மன்னார்குடி சார்பதிவாளர் ஆவண எண்.207/1996 முடிவுறா ஆவணம் என சொல்லி தான் உத்தரவு போட்டார் என்றால் சரிதான். அந்த முடிவுறா ஆவணம் என்றால் ஒவ்வொரு பக்கத்திலும் கிரைய சாசனம் செய்து கொடுக்கும் நபரின் கையெழுத்து இல்லை என்றும், மதிப்பு குறைப்பு விதியின் பேப்பர் இணைக்கப்படவேண்டும் என்றும், அந்த இணைப்பு பேப்பரில் கிரைய சாசனம் செய்துக்கொடுக்கும் நபர் கையொப்பம் செய்து கொடுக்கவேண்டும் என்றும், இணைப்பு பேப்பரிலும், கிரைய சாசனத்தின் அனைத்து பேப்பர்களிலும் கையெழுத்து இல்லாத காரணத்தினாலும் முடிவுறா ஆவணம் என முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

19) மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவில் 2ம் பக்கத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணத்தின் மதிப்பு அறிக்கை (ஆவண மதிப்பு குறைப்பு தடுப்பு சட்டம் விதி 3)–லுள்ள கையெழுத்து எதிர்மனுதாரருடையதல்ல என்றும்,கையெழுத்து நிபுணரின் கருத்து பெறவேண்டும் என்றும், இ.ம. மனு தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதிப்பு குறைப்பு தடுப்பு சட்டத்தின் கீழுள்ள பேப்பரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் இல்லை. அதனால் தாக்கல் செய்யவில்லை. கிரைய சாசனத்திலுள்ள கையொப்பம் அவருடையதல்ல என்பதால் கைரேகை நிபுணருக்கு அனுப்பப்படும்போது, மதிப்பு குறைப்பு ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

20) கடந்த 24.12.1996–ல் 4 முத்திரை தாள்கள் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீண்டும் 05.08.1997–ல் தாக்கல் செய்யப்படும்போது மன்னார்குடி சார்பதிவாளர் 4 முத்திரை தாள்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். கடந்த 05.08.1997ல் தான் மாவட்ட பதிவாளர் உத்தரவின் அடிப்படையில் மன்னார்குடி சார்பதிவாளர் பி.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்தார் என்றால் சரிதான். அப்போது தான் ஆவண எண்.1620/1997 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21) மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவிற்கு எதிர்த்து மேல்முறையீடு செய்தவற்கு வாதிக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். 30 நாட்கள் கால அவகாசம் கொடுத்திருந்த நிலையில் மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவிற்கு மறுநாள் மன்னார்குடி சார்பதிவாளர் கிரைய சாசனத்தை பதிவு செய்தது தவறானது என்றால் சரியல்ல. வாதி மேல்முறையீடு செய்தால் உண்மை விவரம் தெரியவந்துவிடும் என்பதால் அவருக்கு எந்த வாய்ப்பும் கொடுக்காமல் உடனடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

22) கடந்த 04.08.1997ல் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிலுள்ள அவரது மகள்கள் வீட்டிற்கு சென்றதால் உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடியவில்லை என்றால் சரியல்ல. கடந்த 05.08.1997லிருந்து 12 வருட காலத்திற்குள் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்து, பி.சா.ஆ.2 கிரைய சாசன ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோருவதற்கு அவருக்கு உரிமையுடையது என்றால் சரியல்ல. வாதி பி.சா.ஆ.2 கிரைய சாசனம்

பதிவு செய்யப்பட்டிலிருந்து 12 வருட காலத்திற்குள்ளாக கடந்த 04.08.2009 ல் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

23) எனது தரப்பில் பி.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்பட்டது குறித்து வாதிக்கு தெரிய வந்ததலிருந்து 1 மாத காலத்திற்குள்ளாக மாவட்ட பதிவாளர் உத்தரவின் சான்றிட்ட நகல் பெற்று உடனடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஒரு பத்திரத்திலுள்ள கையெழுத்து அவருடையதல்ல என்று மறுக்கும் பட்சத்தில் அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டும் என்று எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தானது காலி மனையாக உள்ளது.

24) காலி மனைக்கு மன்னார்குடி நகராட்சிக்கு காலி மனை வரி ரசீது கட்ட வேண்டும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் தாவா சொத்து எங்களது அனுபவத்தில் இல்லை என்றாலும், தற்போது வரை வாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.5 எனக்கு வழங்கப்பட்ட அனுமதி இல்லை என்றால் சரிதான். அது என் அண்ணனுக்கு வழங்கப்பட்டதாகும்.

25) எனது பெயரில் கிரைய செய்யப்பட்ட இடத்தில் கட்டிடம் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்னதாக நீதிமன்றத்தில் பல தேதிகளில் திருப்பபட்டதற்கு பின்பு வாதி சென்னை உயர்நீதிமன்றத்திற்க சென்று அங்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி எப்போது வெளிநாட்டிற்கு சென்றார், எப்போது இங்கு வந்தார் என்பது குறித்து உயர்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துவற்கு பாஸ்போர்ட் தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

26) கடந்த 10.02.1995ல் வாதி அவருடைய கையெழுத்தை S.R.V.தங்கமணி என்று மாற்றம் செய்யப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கடந்த 09.02.1996–ல் வாதி ஏற்படுத்திக்கொடுத்த டிரஸ்ட் ஆவணத்தில் S.R.V.தங்கமணி என்று தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால்

அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி எனது சித்தப்பா என்பதால் உறவுமுறையின் அடிப்படையில் அவரது கையொப்பத்தை மோசடியாக வி. தங்கமணி என்று பி.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் இடையே 1995லிருந்து பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். நான் மோசடியாக அவருடைய சொத்தை அபகரித்துள்ளேன் என்பதால் தான் அவர் அவருடைய மருத்துவ தொழிலை விட்டுவிட்டு, அவரது சொத்தை பாதுகாக்கவேண்டும் என்பதால் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

27) எனது எதிர்வழக்குரையில் காலவரையறைக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் பி.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள கையொப்பம் வாதியுடையதுதான் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களிலுள்ள கையொப்பம் வாதி தங்கமணியுடையது அல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ளதுபடி பரிகாரம் வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.20 18:44:23 +0530

District Munsif
Mannargudi.